# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## மத்தியஸ்த சபைகள் (திருத்தம்)

***1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2024, யூலை மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, யூலை மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

**[ 277 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**_சட்டப்பயன் பற்றிய கூற்று_**

**_வாசகம் 2 :_** _இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது திறத்தவர் நீதிமன்றத்தின் முன்னர் தீர்த்துவைக்காமையை ஒப்புக்கொண்டிருப்பின் அல்லது மத்தியஸ்தம் ஊடாக அத்தகைய பிணக்கைத் தீர்த்துக் கொள்வதற்கு அவர்களது விருப்பமின்மையை சுட்டிக்காட்டின், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பில் பிணக்குக்கான எவரேனும் திறத்தவரிடமிருந்து தீர்த்து வைக்காமைக்கான சான்றிதழின்றி ஏதேனும் விண்ணப்பத்தை முதனிலை நீதிமன்றம் ஏற்றுக்கவனிப்பதற்கு இயலச் செய்வதற்கானதுமாகும்._

*ச.வ.- ஓ. 67/2023*

**1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்                ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

***2.*** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், "பணித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"பணித்தல் வேண்டும்:

ஆயின் மேலும், அத்தகைய தீர்த்துவைக்காமை பற்றிய சான்றிதழ் விண்ணப்பத்தை செய்கின்ற தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியொன்று காலாவதியான பின்னர் வழங்கப்படவில்லையாயின், முதனிலை நீதிமன்றம் இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய் யப்பட்ட தவறு தொடர்பில் பிணக்கிற்கான திறத்தவர்கள் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய தீர்த்துவைக்காமையை ஒப்புக்கொண்டிருப்பின் அல்லது மத்தியஸ்தம் ஊடாக அத்தகைய பிணக்கைத் தீர்த்துக் கொள்வதற்கான அவர் களது விரும்பமின்மையை சுட்டிக்காட்டின் அத்தகைய தவறொன்று தொடர்பில் ஏதேனும் வழக்கை ஏற்றுக் கவனிப்பதிலிருந்து தடைசெய்யப்படுதலாகாது.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***3.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.